சிறுவர் சிற்றிதழ் - 2

# சிட்டு



ஆசிரியர்
திருமலை சுந்தா

10/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்கல்வியில் வளர்ந்து கலைகளில் சிறப்போம்

அட்டைப்படம் : ஆலன்



நல்லதை எண்ணி
நல்வழி நடப்போம்

# சிட்டு

172, பிரதான வீதி, திருக்கோணமலை

சிறுவர் சிற்றிதழ் - 2

2010 -மாசி

### இதழில்....


- அமைதிப்புறாவே!
- பாப்பா பார்
- யாழ்ப்பாணன்
- ஔவை சென்ற தூது
- சொண்டுகள்
- தொலைபேசி
- பாட்டி
- ஏவுகணை
- பார்த்து


ஆக்கங்களுக்கு படைப்பாளிகளே பொறுப்பு



## ஆசிரியரின்......

சிட்டு:2 சிற்றிதழ் உங்கள் கரங்களில். மகிழ்ச்சி தானே! இளம் வாசகபிஞ்சுகளே....

"வாசிப்பு" நிரம்பியவர் மனித சிந்தனை பெற்றவராக வாழ்வது மட்டுமல்ல மற்றவர்களையும் வழிநடத்துவார் என்பது சத்தியமான உண்மை

இளம் வயதிலேயே இந்த வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் வாழ்வில் முழுமனிதனாக வாழலாம். அன்பு இளம் நெஞ்சங்களே.

எங்கே உங்கள் ஆக்கங்கள்? துணிந்து அனுப்புங்கள். உங்களுக்காகத் தானே "சிட்டு" சிறகடிக்கின்றது.

சந்தர்ப்பங்கள் தேடிவராது வந்தால் அதை பயன்படுத்துவது கெட்டித்தனமானது.

ஆதரவு தாருங்கள். சிட்டு சிறகடிக்க உதவுங்கள்.


தோழமையுடன் புன்னகையுடன் சிட்டு அடுத்த மாதம் சிறகடித்து உங்கள் இல்லம் வரும்.

அச்சு: அஸ்ரா பிரின்டர்ஸ்
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-மதுமிதா இராசேந்திரம் -



அமைதிப் புறாவே! அமைதிப்புறாவே
அகிலம் எங்கும் நீ பறந்து
அமைதி தனை தேடி அலைந்து
யுத்த மேகத்தினுள் நீ நுழைந்து
இறக்கை இரண்டும் நொந்து...
இறக்கை இரண்டும் நொந்து வலிக்க
நாவறண்டு தாகம் எடுக்க
தங்கமணித் திருநாட்டில் இப்போது
இறக்கை மடித்து இறங்கி விட்டாயா?

* * * *

தெங்கு தேயிலை இறப்பருடன்
மருதம் முதல் நெய்தல் வரை
இன்னோரன்ன வளங்களுடன்
பல்வளங்கள் பெருகியுள்ள
தங்கமணித் திருநாட்டில்
தமிழர், சிங்களவர், பறங்கியர்,
இஸ்லாமியர் என்று ஈரிரண்டு
இனத்தவர்கள் இன்புற்று இருந்தனரே

* * * *

இடைப்பட்ட காலத்தில்
இ:.து என்நாடு
இ:.து என்மொழி
இ:.து என்மதம்
என்று கூறி
இனப்பிரச்சனை தோன்றி
மழலை முதல் வயோதிபரும்
இளையவரும் இடைப்பட்டவரும்
அல்லல் உற்று இருந்தனரே
அப்போது நீ எங்கு சென்றாய்?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதிப்புறாவே! அமைதிப்புறாவே!
குண்டுகளும் வெடிகளும்
வெடித்த சத்தத்தில்
வெருண்டோடிப் போனோரைப்
பார்க்கப் பிடிக்காமல்
பறந்தோடிப் போனாயா?
வெஞ்சமர் வேள்வியில்
எம்மவர்கள் சிந்திய குருதியை
காணச் சகிக்காமல்
காத தூரம் போனாயா?

* * * *

அமைதிப்புறாவே! அமைதிப்புறாவே!
கந்தகப் பொடிமணத்தை
சுவாசித்த உன் நாசிகள்
பூந்தளிர் வாசத்தை
சுவாசிக்க ஆவல் கொண்டனவா?
அகதிப்பட்டத்துடன்
பிரிந்துள்ள உறவுகள்
ஒன்றாக இணைந்திடல் காண
உன் உள்ளம்
அவாக கொண்டதா?

* * * *

அமைதிப்புறாவே! அமைதிப்புறாவே!
இரக்கம் மிகக் கொண்டு
இன்னல் போக்க என்று
இம்மண்ணில் வந்தாயா?
இம்சை தனை நீக்கி
இன்பம் தர என்று
இம்மண்ணில் வந்தாயா?
ஓ...... அமைதிப்புறாவே!
உன்வரவால் உருவாகிய அமைதி
என்றும் நிலைத்து இருக்க
ஆவனம் செய்து விடு
அழகான ஈழம் மலர
அடித்தளம் இட்டுவிடு.

*********

## பாப்பா பார்...



காகக் கூட்டில் குயில்முட்டை
காக்குது காகம் பெரிதாக
கேக்கும் குரலால் குயிலென்று
காகம் அறிந்தும் இரங்குதுபார்

* * * *

காகம் கரைந்து இனம் சேர்க்கும்
கூவும் குயிலும் அதைப் பார்க்கும்
கரைந்து இனத்தைச் சேர்ந்தேதான்
இரையை உண்பதை பாப்பாபார்

* * * *

பாப்பா நீயும் பார் காகம்
பண்புகள் பலது கொண்டது காண்
பாடம் பலதும் நாம் படிக்க
பார்த்து நீயும் பெரிதாவாய்

கவிஞர்
-பunder-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களே, உங்களது குடும்பத்திலே ஒரு குழந்தை இருக்கிறதா? அது என்ன செய்யும்? எப்படி விளையாடும்? நீங்கள் அதனுடன் எப்படி விளையாடுவீர்கள்? இவற்றை எல்லாம் நினைத்துக்கொண்டு கீழே இருக்கும் பாட்டைப்படியுங்கள்.

## எனது பொம்மை

**தோழா, எனக்கொரு பாப்பா உண்டு.**
**தொட்டில் தானதன் வீடாகும்.**
**விழாமல் அதனை அணைத்திடுவேன் நான்**
**விளையாட்டெல்லாம் காட்டிடுவேன்.**

**கையைக் கையை ஆட்டுமடா – அது**
**காலை மடக்கி நீட்டுமடா**
**பையமெல்ல அடியெடுத்து – அது**
**பாரினில் நடந்து உலவுமடா,**

**புத்தகம் தன்னை கிழிக்குமடா– அது**
**பொருள்களை வாங்கி எறியுமடா**
**எத்தனை குற்றம் செய்தாலும்**
**எவர்க்கும் அதனில் பட்சமடா**

**என்னைக் கண்டால் சிரிக்குமடா!– அது**
**இன்பக் கதைகள் உரைக்குமடா**
**சின்னக் கையால் அடிக்குமடா – அது**
**சேர்த்துப்பின்னர் அணைக்குமடா!**

குழந்தைக்கு விளையாட்டுப் பொம்மையிலே விருப்பம் உங்களுக்கு குழந்தையிலே விருப்பம் குழந்தை உங்களுக்கு விளையாட்டுப் பொம்மை! அந்தப் பொம்மையைப்பற்றி நீங்கள் நினைப்பதை எல்லாம் இந்தப் பாட்டுச் சொல்கிறது.

இக்குழந்தை உங்களைக் கண்டால் முகம் மலர்ந்து சிரிக்கிறது.

## யாழ்ப்பாணன்



கையைக் காலை ஆட்டுகிறது. நீங்கள் இக்குழந்தையை கட்டி அணைத்துத் தூக்குகிறீர்கள். விளையாட்டு காட்டுகிறீர்கள். உங்களது புத்தகத்தை கொடுத்தால் அது தனது சின்னக்கையால் பிடித்து இழுக்கிறது. புத்தகம் கிழிகிறது! "ஐயோ! என் புத்தகம்!" என்று நீங்கள் சிணுங்குகிறீர்கள். குழந்தை கலகல என்று சிரிக்கிறது! இதை எல்லாம் இந்தப் பாட்டு உங்களது கண்ணில் காட்டுகிறது. அல்லவா!

இந்தப் பாட்டை எழுதியவர் யாழ்ப்பாணன் என்னும் கவிஞர். வெசிவக்கொழுந்து என்பது இவரது சொந்தப் பெயர். யாழ்ப்பாணன் என்பது புனைபெயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் வடக்குப் பகுதியிலே பருத்தித்துறை என்னும் நகர் இருக்கிறது. அதன் அயலே உள்ள புலோலி என்னும் ஊரில் பிறந்தவர் யாழ்ப்பாணன்.

இலங்கையிலே குழந்தைகளுக்காகப் பாட்டு எழுதிய முன்னோடியான கவிஞர்களுள் யாழ்ப்பாணன் ஒருவர் இவர் 1935 ஆம் ஆண்டு தொடக்கம் குழந்தைப் பாடல்கள் புனைந்து வந்தார். இவரது குழந்தைப் பாடல்கள் பாலர் கீதம், கண்ணன் பாட்டு என்னும் இரண்டு நூல்களாக வெளிவந்துள்ளன. வளர்ந்தோர்க்குரிய கவிதை நூல்கள் இரண்டும் யாழ்ப்பாணன் வெளியிட்டுள்ளார். கவிஞர் யாழ்ப்பாணன் ஓர் ஆசிரியர் உயர் வகுப்பு மாணவர்களுக்கு என கணிதபாட நூல்கள் எழுதியுள்ளார். இவர் தாம் எழுதிய பாடநூல்களையும், கவிதைகளையும் பதிப்பிப்பதற்கும் சொந்த அச்சகம் வைத்திருந்தார்.

யாழ்ப்பாணனுடைய குழந்தைப் பாட்டுகள் இலகுவான, இனிமையான பாடல்கள் ஆகும். குழந்தைகளுடைய உள்ளப் பாங்கை உணர்ந்து இவற்றை புனைந்திருக்கிறார் யாழ்ப்பாணன்.



# ஔவை சென்ற தூது

பழந்தமிழ் நாட்டிலே தகடூர் என்னும் பெயருடைய ஒரு சிறிய நாடு இருந்தது. அதியர் என்னும் மக்கள் அங்கே வாழ்ந்து வந்தனர். ஒரு காலத்தில் அதியமான் என்னும்.... அரசன் அந்த நாட்டை ஆண்டு வந்தான்.

அதியமான் தனது குடிமக்கள் நலமாக வாழ வேண்டும் என்னும் ஆர்வம் உடையவன். அவர்களிடம் அன்பு கொண்டவன். அவர்களது குறைகளை அறிந்து அவற்றை நீக்கி அவன் நல்லாட்சி செய்தான் அதியன் சிறந்த போர்வீரனுமாவான்.

அவனுடைய காலத்தில் பறம்பு நாட்டுக்குப் பக்கத்தே வேறு சில குறுநில மன்னர்களும் இருந்தார்கள் அவர்கள் அதியன் மேல் பகைமை கொண்டு, அடிக்கடி அவனோடு போர் தொடுத்தார்கள். அதியன் அந்தப் போர்களில் எல்லாம் வென்றான்.ஆயினும் அவனுக்கும் மற்றைய மன்னர்களுக்கும் இடையேயிருந்த பகைமை நீங்கவில்லை.

ஒரு சமயம் தமிழ் மூதாட்டியாகிய ஔவையார் அதியமானிடம் வந்தார். புலவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரிக்கும் வள்ளலாகிய அதியமான், அவரை அரண்மனையில் தங்கியிருக்குமாறு கேட்டுக் கொண்டான். ஔவையாரும் அவனது வேண்டுகோளை ஏற்று அங்கே தங்கியிருந்தார்.

அக்காலத்தில் அதியமானுடைய குணநலன் களையும் போர்த்திறமையையும் நல்ல ஆட்சியையும் அவர் நன்றாகக் கண்டு கொண்டார். அதியனுக்கும் அயல்நாட்டு மன்னர் களுக்கும் இடையேதீராத பகை இருந்து வருவதையும் அதனால் எந்நேரமும் போர்மூளக் கூடிய ஆபத்து இருப்பதையும் அவர் உணர்ந்தார்.

அயல் நாட்டு அரசனாகிய தொண்டைமான் அதியமானுடன் போர் செய்வதற்கு ஆயத்தமாகிறான் என்னும் செய்தியை அறிந்தார் ஔவையார். அந்தப் போர் மூண்டால் அவ்விரு நாடுகளிலும் மக்கள் கொல்லப்படுவார்களே. நாடுகள் அழியுமே என்று அவர் வருந்தினார். போரினைத் தவிர்க்குமாறு அதியனுக்கு அறிவுரை கூறினார். பின்பு அவனது இணக்கத்துடன் போர்த் தவிர்ப்புக்காகத் தொண்டைமானிடம் தூது சென்றார். தொண்டைமான் ஔவையாரை வரவேற்று உபசரித்தான் அவர் வந்திருப்பதன் நோக்கம் அவனுக்குத் தெரிந்து விட்டது. ஆயினும், அவர் அது பற்றிப் பேசும் முன்பு தனது படைப்பலத்தை அவருக்குக் காட்டிவிட வேண்டும் என எண்ணி, "ஔவையாரே, எனது அரண்மனையை நீங்கள்



பார்க்க வேண்டும் வாருங்கள்" என்று கூறி அவரைத் தனது அரண்மனையின் ஒவ்வொரு பகுதிக்கும் அழைத்துச் சென்றான். கடைசியில் தனது படைக்கலக் கூடத்துக்கு வந்து "இது எனது ஆயுதகூடம் நன்றாகப் பாருங்கள்" என்றான்.

ஔவையார் அங்கே அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களை எல்லாம் நன்றாகப் பார்த்தார். "இது எனது படைக்கலங்கள் எப்படி? "என்று கேட்டான் தொண்டைமான்.

"மன்னா! உனது படைக்கலங்களைக் கண்டு நான் வியக்கிறேன் வாள், ஈட்டி, சூலம், வில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பு, கவசம் என இவற்றில் எத்தனை வகை ! எவ்வளவு தொகை! இந்த வேல்களின் காம்புகள் எவ்வளவு திண்மையாக இருக்கின்றன. வேல்களின் இலைகள் நெய் பூசப்பட்டு ஒளி வீசுகின்றன. வாள்கள் பளபள என்று மின்னுகின்றன! ஆயுதங்களையும் எல்லாம் அழகாக வரிசையாக அடுக்கி வைத்திருக்கிறாய்! ஆகா" என்றார் ஔவை.

இதைக் கேட்டதும் தொண்டைமானுடைய முகத்தில் பெருமை பொங்கி வந்தது. உடனே, "புலவரே உங்கள் அதியனுடைய படைக்கலக்கூடம் எப்படியி ருக்கிறது? இது போல உள்ளதா? " என்று கேட்டான். இதைக் கேட்ட ஔவை ஒரு கணம் சிந்தித்தார். பின் அமைதியாக.

"அதை எப்படிச் சொல்வேன் மன்னா! காம்பு முறிந்த வேல்கள்! நுனி உடைந்த ஈட்டிகள்! கூர்மழுங்கிய வாள்கள்! நாண் அறுந்து சிதறிய விற்கள்! இவை தான் அங்கே உள்ள படைக்கலங்கள். அவை படைக்கல கூடத்தில் இல்லை. கொல்லர் பட்டறையில் திருத்துவதற்காகக் கொண்டு போய்ப் போடப் பட்டிருக்கின்றன!" என்றார் ஔவையார். இதைக் கேட்டதும் தொண்டைமானுக்கு தற்பெருமை மறைந்து விட்டது.

"அதியமான் உன்னைப் போல ஆயுதங்களை அடுக்கி வைத்து அழகு பார்ப்பவன் அல்லன்! அவன் பல போர்களை நடத்தி வெற்றி கொண்ட பெரும் வீரன்! அவனோடு போரிட்டு நீ வெல்லுவாய் என்று நினைக்காதே!" என்று ஔவையார் குறிப்பாகச் சொல்கிறார் என்பது அவனுக்குப் புரிந்து விட்டது.

தொண்டைமான் போர் புரிய வேண்டும் என்ற எண்ணத்தை விட்டுவிட்டான். ஔவை தனது சாதுரியமான பேச்சினால் தொண்டைமானது மனத்தை மாற்றி, அதியனிடம் மீண்டும் வந்தார். ◆

## குறளின்பம்



◆ மனநலம் மன் உயிர்க்கு ஆக்கம்
இனநலம் எல்லா புகழும் தரும்

– குறள் – 457 –

◆ மனநலம் மக்களுக்கு ஆக்கம் தரும். சேர்ந்த இனநலம் எல்லாப் புகழையும் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொண்டுகள்



மனிதர்களாகிய நமக்கு வாயிலே பற்கள் இருக்கின்றன. உணவை நறுக்குவதற்கு அரைப்பதற்கு கையிலே நகங்கள் இருக்கின்றன. சொறிவதற்கு நுண்ணிய பொருளை எடுப்பதற்கு

மனிதருக்கு உள்ளது போலவே விலங்குகளுக்கும் இப்படியான அமைப்புகள் இருக்கின்றன. அவற்றினது வசிப்பிடம், உணவு முறை என்பவற்றுக்குப் பொருத்தமாக அந்த உறுப்புகள் அமைந்திருப்பதைக் காணலாம்.

பறவைகளின் சொண்டுகளைக் கவனிப்போம். கிளியின் சொண்டின் அலகு இரண்டும் ஒரே அளவாக இல்லை. கீழ் அலகு சிறியதாக இருக்கின்றது. மேல் அலகு பெரியதாகவும் கீழ் நோக்கி வளைந்தும் இருக்கிறது. ஏன் இப்படி? கிளியின் முக்கியமான உணவு நொருங்கி விழுங்குவற்கு அதன் சொண்டு பயன்படுகிறது. அது ஒரு நொருக்கி.

கொக்கு, நாரை என்பவற்றிற்கு நீண்ட கூரான சொண்டு இருக்கிறது. ஏன்? கொக்கு மீனை நீருக்குள்ளேயிருந்து கொத்தித் தூக்க வேண்டும். ஆகவே, அதற்கு நீண்ட சொண்டு தேவை.

நீண்ட கழுத்து, நீண்ட சொண்டு இரண்டும் மீனைக் கொத்துவதற்குப் பொருத்தமான அமைப்பு.

வாத்தின் அலகு எப்படி? அலகுகளின் நுனி மட்டமாகவும் சப்பையாகவும் இருக்கிறது. சேற்றைக் குடைந்து மீன், பூச்சி, புழுக்கள் முதலியவற்றைப் பிடித்து வாய்க்குள் வைத்து மூடிக் கொள்ளுவதற்கு வசதியான அமைப்பு அது.

கழுகினது சொண்டு அதனுடைய மேல் அலகு பெரியது. வளைவானது! அதன் நுனி ஈட்டி போலக் கூராக இருக்கிறது! கீழ் அலகு அகலமாக விரியக்கூடியது. பிய்த்துப் பிடுங்கி விழுங்குவதற்குப் பொருத்தமானது கழுகின் சொண்டு.

மரங்கொத்தியின் சொண்டு ஒரு உளிபோல இருக்கிறது. மரங்களைக் கொத்தித் துளைக்க வேண்டுமே, அதற்காக ஒவ்வொரு பறவையின் சொண்டையும் அவதானித்துப் பார்த்தால் அதன் அமைப்பில் உள்ள அதிசயம் நமக்கு தெரியவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைபேசி

-நம்பியன்-



அமெரிக்க விஞ்ஞானி அலெக்ஸாண்டர் கிரகாம் பெல் என்பவர் தொலைபேசியைக் கண்டுபிடித்தார். இந்த நூற்றாண்டில், முன்னேறிய நாடுகளில் எல்லாம் தொலைபேசி இல்லாத வீடே இல்லை என்லாம். எல்லா விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், அதனால் உண்டாகும் வளர்ச்சிகள் போன்றவற்றால் நன்மைகளும் உண்டு, தீமைகளும் உண்டு. தீமைகளைக் குறைத்து நன்மைகளை மிகையாக்குவது நல்ல ஒரு சமுதாயத்தின் கடமையாகும்.

நாம் ஒருவர் மட்டும் வீட்டில் தொலைபேசி வைத்துக் கொண்டால், அதனால் நன்மை அதிகம் இல்லை. நாம் யாருடன் எல்லாம் பேச நினைக்கிறோமோ அவர்களிடம் எல்லாம் தொலைபேசி இருந்தால்தான் வசதிகள் உண்டாகின்றன. ஓர் இடத்தை விட்டு பின்னொரு இடத்திற்கு போவதைக் குறைக்கலாம். ஒரு காலத்தில் நமக்குத் தேவையானவை எல்லாம் (படிப்பு, வேலை, உணவு, உடை, பொழுதுபோக்கு) உற்றார், உறவினர், விழாக்கள்...) நம்மைச் சுற்றியே இருந்து வந்தன. மக்களிடம் வளர்ச்சிகள் பெருக ஆரம்பித்தவுடன், ஓர் இடத்தை விட்டு பின்னுமொரு இடத்திற்குப் போக வேண்டிய தேவைகள் பெருகின. செய்திகளைத் தரவும், பெறவும் 'அஞ்சல்' உ(போஸ்டல்) முறைகளை மனிதன் உண்டாக்கினான். அஞ்சல் முறையில் கடிதம் போய் பதில் வரக் காலதாமதம் ஆகின்றது. நமக்கு வேண்டியவர்களிடம் நேரில் பேசுவது போலவே துரிதமாகத் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முடிகிறது. அது மட்டுமல்ல நமக்கு வேண்டியவரின் குரலையும் நேரிடையாகக் கேட்க முடிகிறது. நேர்முகப் பேச்சு வார்த்தையும், கேள்வி-பதிலும் நடத்த முடிகின்றது. இந்த வழியில் தொலைபேசியின் முன்னேற்றம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அந்நாட்டில் உள்ள தொலைபேசி வசதியைக் கொண்டு கணிக்க வேண்டிய நிலை இன்று உருவாகி விட்டது.

நம் நாட்டிலும் தொலைபேசியின் முன்னேற்றம் குறிப்பிடத்தக்கது.

அரசாங்கமும், தொலைபேசிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து மூலை முடுக்குகளில் எல்லாம் பரப்பி வருகிறார்கள். ஒரு சின்ன கிராமத்தில் கூட உள்நாட்டு/ வெளிநாட்டு தொலைபேசி மையங்கள் இருக்கின்றன.

தொலைபேசியின் முக்கிய அம்சங்கள் நான்கு.

1. நாம் பேசும் பேச்சை மின் அலையாக்குவது.

2. அந்த மின் அலையை டெலிபோன் ஒயர்கள் (wire) மூலம் ஓரிடத்தில் இருந்து பிறிதோர் இடத்திற்கு கொண்டு செல்வது.

3. சென்ற இடத்தில் மின் அலைகளைப் பேச்சொலியாக மாற்றுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. டெலிபோன் நெட்வொர்க் எனப்படுவது

ஐட்டம் 1ம், 3ம் சேர்ந்தது தான் நாம் கண்கூடாகக் காணும் டெலிபோன். ஐட்டம் 4ஐப் பற்றி சற்று விளக்கமாகக் காண்போம். ஓர் ஊரில் அரிச்சந்திரன் ஆதி மூலம், இந்திரன், ஈஸ்வரன் என்று நான்கு பேர்கள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். எத்தனை தொலைபேசி இணைப்புகள் (கனெக்ஷன்கள்) வேண்டும்?

அரிச்சந்திரனுக்கும், ஆதிமூலத்திற்கும் ஒன்று: அரிச்சந்திரனுக்கும், இந்திரனுக்கும் ஒன்று.

ஆகக்கூடி 6 இணைப்புகள் (கனெக்ஷன்கள்) தேவை. 10,000பேர் இருக்கும் ஒரு சின்ன நகரத்திற்கு எத்தனை இணைப்புகள் (கனெக்ஷன்) வேண்டும் தெரியுமா? 49,995000 இணைப்புகள் (கனெக்ஷன்) தேவைப்படும். இந்தப் பத்தாயிரம் பேரும் சதா நேரமும் ஒருவருக்கு ஒருவர் பேசிக் கொண்டு இருக்க மாட்டார்கள். இத்தனை கோடி இணைப்புகள் உண்டாக்கவும், செலவுகள் அதிகமாகும். நடைமுறையில் வேறு மாதிரி செயல்படுத்துகிறார்கள். 10,000 பேரில் சுமார் ஆயிரம் பேர்கள்தான் ஒரே சமயத்தில் பேசுவார்கள் என்று வைத்துக் கொள்வோம். ஆயிரம் இணைப்புகளை வைத்தக்கொண்டு யார் யாரிடம் பேச விரும்புகிறார்களோ, அவ்விருவரையும் இணைக்க ஓர் இணைப்பைப் பயன்படுத்தி அவர்கள் பேசி முடித்ததும், அந்த இணைப்பை 'மாற்றி' அல்லது ஸ்விட்ச் பண்ணி (switching) மற்றவர்களுக்காக என்று தயாராக வைத்துக்கொள்வது. இந்த முறையில்தான் தொலைபேசிகள் இயங்குகின்றன. இந்த முறைப்படி இயங்க இரண்டு முக்கியத் தேவைகள்:

1. ஒவ்வொரு தொலைபேசிக்கும் ஒரு தொலைபேசி எண் குறிக்கப்பட வேண்டும். ஒரே எண்ணை இரண்டு தொலைபேசிக்குக் கொடுக்கக்கூடாது இன்னொருவர் விரும்பினால் இவர்கள் இருவருக்கும் ஓர் இணைப்பு ஒதுக்கப்படும் இந்த ஒதுக்கும் கருவிகள் கூட்டு தான் தொலைபேசி நெட்வொர்க் எனப்படும்.

2. திடீரென்று ஒரு நாள்... பொங்கல் என்று வைத்துக் கொள்வோம். ஆயிரத்திற்கு மேற்பட்ட இணைப்புகள் தேவைப் படுகின்றன என்று வைத்துக் கொள்வோம். ஏன்? பலபேர் பல பேர்களுடன் அந்த நேரத்தில் பேச விரும்புகின்றனர் என்பதால், கைவசம் இணைப்புகள் தயாராயில்லை என்ற நிலையை பேச முயல்பவருக்கும் உணர்த்த வேண்டும். இதைத்தான் 'பிஸி' கண்டிஷன் என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள். இன்னொரு பிஸி கண்டிஷனும் உண்டு. அரிச்சந்திரன், ஆதிமூலத்திடம் பேசிக்கொண்டிருக்கும் அதே தருணத்தில், இந்திரன் இவர்கள் யாரிடமாவது பேச முனைந்தால், இந்திரனால் அது முடியாது. அதுவும் ஒரு வித 'பிஸி' கண்டிசன்.

முதலில் நகரங்களில் தொடங்கிய டெலிபோன் நெட்வொர்க் நாடெங்கிலும் பரவி, தற்போது உலகமெங்கும் வியாபித்துள்ளது. ஒவ்வொரு நாட்டுக்கும், ஒவ்வொரு நகருக்கும் தனித்தனி எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாட்டி

1. வா வா பாட்டி,
வந்திரு பாயில்!
தாதா நாவால்
தமிழ்த்திருப்பாடல்!

2. பல்லிலா வாயால்
பழங்கதை சொல்லு!
நல்வடைக்கதை சொல்!
நரிக்கதை சொல்லு!

3. குடக்கதை சொல்லு!
கூறு காக்காயை!
கடற்கதை சொல்லு!
கத்தும் ஆட்காட்டி!

4. தாத்தாக் கதை சொல்!
தவளையின் கதை சொல்!
காத்திருக்கின்றேன்,
கதை சொல் பாட்டி!

* * * *

## ஏவுகணை

1. ஏவுகணை கொண்டு வா,
ஏறி அதில் குந்துவோம்!
தாவி அது பறக்குமாம்,
தண்மதிக்கும் போகுவோம்!

2. காற்றும் நீரும் தேவையே!
கடலைப் பார்க்க வேண்டுமே!
சேற்று வயல்கள் இல்லையே!
செழிப்பு மரங்கள் இல்லையே!

3. செவ்வாய்க்குமே சென்று நாம்
சேர நாட்கள் ஆகுமாம்!
எவ்வாறங்கு இருக்குமோ?
எந்த உயிர்கள் வாழுமோ?

4. அண்டம் சுற்றிப் பார்க்குமோர்
ஆசை வளர்ந்து வருகுதே!
கண்டு வந்து சொல்ல நம்
காலம் போதும் – போதுமோ?

* * * *



## பார்த்து.....?

1. மயிலைப் பார்த்து மந்தியார்
மரத்தில் நடனம் ஆடினார்!
குயிலைப் பார்த்துக் கோழியார்
கொக்கரித்துத்திரிகிறார்!

2. புலியைப் பார்த்துப் பூனையார்
போடுகின்றார் வரிகளை!
எலியைப் பார்த்து எறும்பரும்
எடுத்து வைப்பர் மீசையை!

3. ஆமை பார்த்து முயலரும்
அதிக முட்டை இடுவரோ?
ஊமை பார்த்து யாவரும்
உதடுமூடிக் கொள்வரோ?

4. குதிரை மானைப் பார்த்ததும்
கொம்பு வைக்கப் போகுமோ?
எதுவும் இருந்த மாதிரி
இருந்து கொள்ளல் நல்லதே!

கவிஞர்
தாமரைத்தீவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org